IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.11

NAME - திரு.ராஜாராம்

OCCUPATION - காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு)

AGE -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

1, 2, 3, 5, 6, 7, 8, 9 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் பனமடங்கி காவல ்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். நான் கடந்த 11.08.2016 தேதி திருவலம் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது இரவு 11 மணிக்கு நிலையம் ஆஜராகி பரமேஸ்வரி, க/பெ.மகாலிங்கம் என்பவர் கொடுத்த எழுத்து மூல புகாரினைப் பெற்று திருவலம் காவல் நிலைய குற்ற எண்.262/2016 இ.த.ச. பிரிவுகள் 342, 364 (A) படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த அச்சுப் படிவ முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7. பின்னர் சம்பவயிடம் சென்று 12.08.2016 காலை 08.30 மணிக்கு காட்பாடி கசம் ரயில்வே கேட்டிடம் பார்வை மகசர் சாட்சிகள் சுந்தரேசன், காமராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.8 மற்றும் மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.9 ஆகும். சாட்சிகள் பரமேஸ்வரி, சுந்தரேசன், காமராஜ், ராஜ்குமார், அசோகன், கோபி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். பின்னர் வழக்குகோப்பை நான் பணி மாறுதலுக்கு சென்றுவிட்டதால் பின்னர் காவல் உதவி ஆய்வாளராக பணியில் சேர்ந்தவர் விசாரணை மேற்கொண்டார். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை-</u>

12.08.2016 அன்று புகார்தாரரை விசாரணை செய்தேன். அ.சா.1 பரமேஸ்வரியின் செல்போனை பெற்று நான் விசாரணை செய்யவில்லை. அ.சா.1 விசாரணையை வாக்குமூலமாக பதிவு செய்தேன். புகார்தாரரின் வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் 30 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் சுமார் 1 மணி நேரம் முதல் 2 மணி நேரத்திற்குல் வந்துவிடலாம். சம்பவத்திற்கு பிறகு மறுநாள் இரவு 11.00 மணிக்கு புகார்தாரர் புகார் கொடுத்தார். புகார்தாரர் அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திவிட்டதாக புகார் அளித்துள்ளார். மேல் அதிகாரியின் உத்தரவிற்கு ஏற்ப எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும் புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 24.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.24 18:42:47 +0600

Additional District Judge(FTC),
Vellore